I said these limits referred to the old assessment. I am sorry this was a slip. Revision petitions now under reference are entertained by the Commissioner only in respect of enhanced or new assessments. Appeals are preferred before the Council against the orders passed by the Commissioner upon these revision petitions. Therefore, the appeal petitions deal with enhanced or new assessments. The ceiling limits mentioned in sub-clause (*a*) and (*b*) of the proposed Rule 26-A relate only to enhanced or new assessments made by the Executive Authority in respect of which the appeals are preferred.

IV. NON-OFFICIAL BUSINESS

(i) *Bill*

***The Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill*, 1970 (*L. C. Bill No.* 2 *of* 1970).**

THIRU G. SWAMINATHAN : Mr. Deputy Chairman, Sir, I move—

'That the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill*, 1970 (L.C. Bill No. 2 of 1970) be taken into consideration.'

THIRU D. SANTOSHAM : I second it, Sir.

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1970 (L.C. Bill No. 2 of 1970) be taken into consideration."

*THIRU G. SWAMINATHAN : Sir, after the enactment of the Tamil Nadu Inam Estates Ryotwari Act, 1963, under section 59 (3) the landowners are prohibited from mortgaging, alienating, leasing or disposing of their immovable properties, inam properties as well as their own properties including their houses. As per section 59 (1) of the same Act, their creditors have also been prohibited from trying to take action on those properties, which are immovable. As per the Act and especially as per section 34, the compensation for these inam lands has to be fixed by the Director of Settlement and after fixing this compensation, the amount has to be deposited with a Tribunal under section 36(1). It usually takes a long number of years for this compensation to be fixed by the Director of Settlement and the amount deposited with the Tribunal. Meanwhile, the inam landowners are prohibited by this Act to sell away their lands, to mortgage their lands or to alienate their lands in any way, and the creditors are also not permitted to take away their property. What exactly happens is this. These inamdars may be inamdars who had a few acres of land, but they might have many acres of land, houses and other properties of their own. They might have

* Published in Tamil Nadu Government Gazette. dated 1-4-1970

got some loans by way of mortgage or on promissory notes from some persons. When these amounts are asked for after the 1963 Act, even though it may be a few thousands of rupees, they are not able to pay back the amount, consequent on inability to sell away any of their property. In such cases, the creditors try to take action on their movable properties such as furniture, utensils, wearing apparel, books and whatever that is available. The inamdars are put to such a humiliating position, even for a small amount which they can very well pay and afford. They have got property for which compensation may be paid in thousands of rupees and their personal property worth thousands of rupees, but yet they may not be able to pay because they cannot alienate or sell away these lands. I think this omission to give protection to movable property was originally taken from the Zamindari Abolition Act. The zamindars were prohibited only from alienating their immovable properties, because most probably they had very costly jewellery and other very valuable movable properties. It is natural that the creditors could also proceed against the movable properties and there was no protection given to the zamindars against the same. But in the case of small inamdars with a few acres of land and who are now being humiliated, I feel that some redress should be given. I, therefore, request that my amendment may be accepted and the words "movable and" may also be added before the word "immovable."

4-40 p.m. *திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு உதவித் தலைவர் அவர்களே, பொதுவாக விவசாயிகள் கடன்பட்டிருந்தால், அவர்களிடம் உள்ள விவசாய நிலத்தின் பெயரால் ஜப்தி, 'அட்டேச்மெண்டு' போன்றவைகள் மூலம் வசூல் செய்யலாம் என்ற முறையிருக்கிறது. ஆனால் இந்த இனாம்தாரர்களைப் பொறுத்த வரையில், பெயர்தான் இனாம்தாரர் என்று இருக்கிறதே தவிர, பெரும்பாலும் அவர்களிடம் ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர்கூட இல்லாத நிலையிருக்கின்றது. அதிகபட்சம் ஐந்து அல்லது பத்து ஏக்கர் நிலத்திற்கு மேல் இல்லாமல் இருக்கக்கூடிய ஸர்வீஸ் இனாம்தார்கள் இருக்கிறார்கள். அதாவது கோவில்களில் பூஜை செய்கின்றவர்கள், தேர் இழுப்பவர்கள், கோவிலின் பூஜைக்குரிய பூ கட்டிக்கொடுப்பவர்கள் இவர்களுக்கெல்லாம் பண்டைய மன்னர்கள், நாயக்க மன்னர்கள், பாண்டிய மன்னர்கள், சோழ மன்னர்கள் ஆளுக்கு ஐந்து ஏக்கர் பத்து ஏக்கர் என்று இனாம் விட்டிருக்கிறார்கள். இப்படிப் பட்டவர்களின் வழி வந்தவர்கள் இப்போது இந்த நிலத்தை எங்கேயாவது அடமானம் வைத்துக் கடன் வாங்கியிருக்கிறார்கள். இப்போது கடன் கொடுத்தவர்கள் அந்தக் கடனை வசூல் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி, கோர்ட்டுக்குப் போனால், அந்த நிலத்தை 'அட்டேச்' பண்ணிக் கடனை வாங்க முடியவில்லை. காரணம், இனாம் ஒழிப்புச் சட்டத்தை நாம் என்றைக்குப் பிரகடனப்படுத்தினோமோ அன்றைக்கே அந்த நிலங்கள் எல்லாம் சர்க்காருக்கு வந்து விட்டன. அரசிடம் 'வெஸ்டு' ஆகிவிட்டன. எனவே இந்த நிலங்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்தால், அந்த நஷ்ட ஈடு கோர்ட்டில் கட்டப்படும். கடன் கொடுத்தவர்கள் அதை 'அட்டேச்' செய்து கொள்ளலாம். ஆனால் அவர்கள் அதுவரை பொறுத்திருக்க விரும்புவதில்லை. வழக்குறைஞரை

28th November 1970] [திரு. கே. ராஜாராம்]

வைத்து அவரிடம் உள்ள அசையும் பொருள்களை 'அட்டேச்' பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள். இது அவர்களுக்குப் பெரும் பாதகமாக இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட சிறிய இனாம்தாரர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்ற முறையில்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த சபையில் நிறைவேற்றுவதற்காக இல்லை, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்றுதான் இதைக்கொண்டுவந்திருக்கின்றார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே இந்தச் சிறிய இனாம்தாரர்களின் நிலையை உத்தேசித்து அவர்களுடைய பாதுகாப்பிற்காக ஏதாவது செய்ய முடியுமா என்று அரசாங்கம் ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : உதவித் தலைவர் அவர்களே, இனாம் ஒழிப்புச்சட்டம் 59-வது பிரிவில் இதுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் ஒரு பிரிவாகவே அமைந்திருக்கிறது. 1908-ஆம் ஆண்டு எஸ்டேட் லேண்டு ஆக்டில் யாருக்கு என்ன என்ன உரிமைகள் என்பதுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்த உரிமைகளை அரசு ஏற்றுக்கொண்டு அதன் பிறகுதான் இனாம் ஒழிப்பு, ஜமீன் ஒழிப்பு என்ற சட்டங்களையெல்லாம் கொண்டுவந்தார்கள். இந்தச் சட்டங்களைக் கொண்டுவந்தபோது, இவர்களுக்கும் ஒரு பாதுகாப்பு வேண்டும் என்ற முறையில், அவர்களுக்கு ஏதாவது வழக்கு ஏற்பட்டால் அந்தச் சட்டத்தினால் இடையூறு ஏற்படும் என்ற முறையில் இந்தச் சட்டம் பாதுகாப்பாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்போது மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இந்த மசோதாவில் 'இம்மூவபிள் ப்ராபர்டி' என்று மட்டும் போட்டிருக்கிறதே. 'மூவபிள்' என்று சேர்த்துப் போட்டால்தான் இந்தச் சின்னஞ் சிறிய இனாம்தாரர்களுக்குப் பாதுகாப்பு ஏற்படும் என்று சொல்லுகிறார்கள். இதைப் பரிசீலிக்கலாம் என்ற எண்ணம் எனக்கும் ஏற்பட்டபோதிலும், இப்போது காலம் கடந்துவிட்ட காரணத்தினால், இந்த நிலையில் இதை ஏற்றுக்கொண்டால் பயன் ஏற்படுமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. காரணம் சுமார் 2110 இனாம் கிராமங்களை அரசு ஏற்றுக்கொள்ளுவதாக இந்தச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்படுகிறது. இதிலே கிட்டத்தட்ட 1490இனாம் கிராமங்களுக்கு, அதாவது 90 சதவிகித கிராமங்களுக்கு இடைக்கால நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில் இப்போது எண்ணியுள்ள இந்தப் பாதுகாப்பை அளிக்க முன்வந்தால், ஏதாவது பயன் ஏற்படுமா என்றே எண்ண வேண்டியிருக்கிறது. 1960-ஆம் ஆண்டு மசோதா கொண்டு வரப்பட்டது. 1963-ஆம் ஆண்டிலே அது சட்டமாக நிறைவேற்றப்பட்டது. 1965-லிருந்து தொடர்ந்து இனாம் கிராமங்களை எடுத்துக்கொண்டு வருகின்றோம். இப்போது ஐந்து ஆண்டிற்குப் பிறகு, இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொண்டால், இதிலே பல நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படும் என்ற கருத்தையும் நான் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். இதிலே சிலருக்கு ரயத்வாரி பட்டா கொடுக்கப்பட்டிருக்கலாம். சிலருக்கு இனாம்தாரர்களாகப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கலாம். இப்போது இந்தத் திருத்தத்தினைக் கொண்டுவந்தால், பல சிக்கல்கள் ஏற்படும் என்பது அரசின் கருத்தாகும். முதலிலேயே நான் குறிப்பிட்டதுபோல, 70 சதவிகித கிராமங்களுக்கு மேலே நஷ்ட ஈடு கொடுக்கப்பட்ட காரணத்தினால், அவர்களுக்கு அதிகத் தொந்திரவு ஏற்படாது என்று நான் கருதுகிறேன்.

28th November 1970] [திரு. எஸ். மாதவன்]

தனிப்பட்ட முறையில் அல்லது பெரும்பான்மையினருக்கு ஏதாவது சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்று நான் கருதவில்லை. மிச்சம் இருப்பவர்களுக்கும் நஷ்ட ஈட்டைக் கொடுத்துவிட்டால், இருக்கும் ஏதாவது இரண்டொரு சிக்கல்களும் தீர்ந்துவிடும் என்று நான் கருதுகிறேன். குறைகள் ஏதாவது இருப்பின், அவற்றைப் பரிசீலிப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக்கொண்டு இம்மசோதாவை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு உதவித் தலைவர் அவர்களே, சட்டம் வந்து பல்லாண்டு காலம் ஆகிவிட்டது என்றும், 70 சதவிகிதத்திற்கு மேலே நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டு விட்டது என்றும், இதனால் சிக்கல்கள் அதிகமாக இருப்பதற்குக் காரணம் இல்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கே பலர் பலவிதமான சிரமங்களை அனுபவித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்று என்னிடம் நேரடியாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களில் பலர், வசதியோடு இருந்தவர்கள், இப்போது மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்குச் சொந்தமாகக் கொஞ்சம் நிலம் இருந்தாலும், அதை விற்க முடியவில்லை. ஒரு லட்ச ரூபாய் சொத்து இருந்தாலும், பத்தாயிரம் ரூபாய்க் கடனை அவர்களால் அடைக்க முடியவில்லை; கஷ்டப்படுகிறார்கள். கடனைக் கொடுத்தவர்கள் அவர்களுக்குள்ள சலன சொத்துக்களை 'அட்டேச்' செய்தால், அவர்கள் அவமானம் தாங்காமல், எப்படியாவது கடனைத் திருப்பிக் கொடுத்து விடுவார்கள் என்ற முறையில் பல தொந்திரவுகள் அவர்களுக்குக் கொடுத்து வருகிறார்கள். இன்னமும் எடுக்கப்பட வேண்டிய கிராமங்கள் 25 சதவிகிதத்திற்குக் குறையாமல் இருப்பதால், பாதிக்கப்படக் கூடியவர்கள் பல நூற்றுக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். எனவே இந்தத் திருத்தம் நியாயமான திருத்தம், சாதாரணமான மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய ஒரு திருத்தம் என்று அரசாங்கம் கருதினால் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும், ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனது கருத்தினை அவை முன் வைக்கிறேன். வணக்கம்.

DEPUTY CHAIRMAN : Does the hon. Member have the leave of the House to withdraw the motion ?

HON. MEMBERS : Yes.

DEPUTY CHAIRMAN : The motion is, by leave, withdrawn.

The motion was, by leave, withdrawn.

(ii) *Resolution*

(1) *Freedom to choose the medium of instruction in schools and colleges*

DEPUTY CHAIRMAN : We shall now take up the part—discussed Resolution of Thiru G. Vasantha Pai. There are some three or four Members to speak. I request the hon. Members to just confine themselves to 10 minutes each.